සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2024 (2025)
இறுதி தவணைப் பரீட்சை - 2024 (2025) / **Year End Term Test - 2024 (2025)**

ශ්‍රේණිය / தரம் / Grade **10**

# வரலாறு - I

කාලය / நேரம் / Time **01 மணி**

නම / பெயர் / Name ..........................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ..........................................

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.

❖ 1 – 40 வரையான வினாக்களில் வழங்கப்பட்டுள்ள விடைகளில் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடி இடுக.

---

1) வரலாற்றை கற்கும் போது பயன்படுத்தப்படும் பிரதான மூலாதார வகைகள் இரண்டும் யாவை ?
   1. இலக்கிய, வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள்
   2. இலக்கியம், கல்வெட்டுக்கள்
   3. கல்வெட்டுக்கள், புதைப்பொருள் வகைகள்
   4. இலக்கிய, புதைப்பொருள் வகைகள்

2) 'அ', 'ஆ' நிரல்களை சரியாக பொருத்தினால் வரும் விடையாவது,

| (அ) | (ஆ) |
|---|---|
| 01) ரொபட் நொக்ஸ் | A. டிமுன்டோ |
| 02) அரிஸ்டோட்டல் | B. பூகோள சாஸ்திர பிரவேசம் |
| 03) குளோடியஸ் தொலமி | C. இன்டிகா |
| | D. அன்றைய இலங்கை |

   1. ABC    2. DAB    3. DBA    4. CBA

3) பனாகடுவ செப்பேடு மூலம் நாம் எந்த நூற்றாண்டின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம் ?
   1. 12ம் நூற்றாண்டு    2. 13ம் நூற்றாண்டு    3. 11ம் நூற்றாண்டு    4. 10ம் நூற்றாண்டு

4) மனிதனும் குதிரைத் தலையும் கொண்ட சிற்பத்தை எங்கு கண்டு கொள்ளலாம் ?
   1. இசுருமுனிய விஹாரை    2. மகாமேகவனப் பூங்கா    3. சீகிரியா    4. பொலன்னறுவை

5) 125000 வருட பழைமையான வரலாற்றுக்கு முற்பட்ட கால தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்,
   1. கித்துள்கல பெலிலென    2. பாஹியன்கல குகை
   3. பதிராஜவெல    4. குருவிட்ட பட்டதொம்பலென

6) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் தமது உணவில் உப்பு பயன்படுத்தினார்கள் என்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் யாது ?
   1. குருவிட்ட பட்டதொம்பலென    2. சீகிரிய அலிகல
   3. பெல்லன்பெந்திபெலஸ்ஸ    4. கித்துள்கல பெலிலென

7) அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் ஒன்றல்லாதது,
   1. இப்பன்கடுவ    2. உடரஞ்சாமடம    3. யட்டிகல்பொத்த    4. கல்சொஹன் கனத்த

8) 'அ', 'ஆ' நிரல்களை சரியாக இணைத்தால் வரும் விடையாவது,

| (அ) | (ஆ) |
|---|---|
| 01) கசீகாரகாமம் | A. வர்த்தக நகரம் |
| 02) கோபாலகாமம் | B. விவசாயிகள் வாழ்ந்த கிராமம் |
| 03) கேவட்டா காமம் | C. இடையர் வாழ்ந்த கிராமம் |
| 04) நியம்கம் | D. மீனவர்கள் வாழ்ந்த கிராமம் |

1. BCDA 2. BDCA 3. CBDA 4. DBAC

9) "தொட்ட போஜக்க" என பருமக்கமார்களை அறிமுகம் செய்துள்ள கல்வெட்டு யாது ?

1. கொண்டவெட்டுவான் கல்வெட்டு 2. கொத்தல்கந்த கல்வெட்டு
3. மிகிந்தலை சுவர் கல்வெட்டு 4. வெஸ்ஸகிரிய கல்வெட்டு

10) கால்வாய்கள் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட குளத்தொகுதியை உலர்வலய மக்கள் எவ்வாறு அழைத்தனர் ?

1. வெவ்பிரபதனய 2. வெவ்பத்ததிய 3. எல்லங்காவ 4. மொஹால்நகர்

11) புராதன காலத்தில் பிரதேச நிர்வாகத்தில் ஈடுபட்ட பெண்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது ?

1. பருமக 2. மதுபாச்சிகா 3. ரஜினி 4. பருமகலூ

12) வசப மன்னன் காலத்தில் யாழ்ப்பாண தீபகற்பம் எவ்வாறு அழைக்கப்பட்டது ?

1. நாகதீபம் 2. யாழ்ப்பாணம் 3. நல்லூர் 4. ஜம்புக்கோளபட்டினம்

13) கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டில் கொடி போன்ற அடையாளம் மூலம் குறிக்கப்படுவது யாது?

1. செங்கல் 2. அன்னம் 3. அன்பளிப்பின் பரிசுத்தம் 4. அரசன்

14) இந்நாட்டு மன்னர்கள் அயல் நாடுகளுடன் விவாகத் தொடர்புகளை மேற்கொண்டமை மூலம் எதிர்பார்த்த மிக முக்கிய விடயமாவது,

1. தனது வீரபராக்கிரமத்தை காட்டுவதற்காக
2. சகோதர உறவு மூலம் அரசியல் ஸ்தீரத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ளல்
3. பல்வேறு நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளல்
4. பொருளாதார இலாபமீட்டல்

15) சேனைப் பயிர் நிலங்களில் இருந்து வரிகளை நீக்கிய நிஸ்ஸங்கமல்ல மன்னன் எந்த இராச்சியத்தின் மன்னனாவான் ?

1. அநுராதபுரம் 2. தம்பதெனிய 3. பொலன்னறுவை 4. குருணாகலை

16) "X" "Y" நிரல்களை இணைத்து சரியான விடையை தெரிவு செய்க.

| (X) | (Y) |
|---|---|
| 01) இரும்புக் கைத்தொழில் | A. மணிகர |
| 02) செப்புக் கைத்தொழில் | B. கபர |
| 03) மட்பாண்டக் கைத்தொழில் | C. தட்டிக |
| 04) இரத்தினக் கைத்தொழில் | D. கும்பகார |
| | E. தம்பகர |

1. BDEA 2. DBCA 3. BCDA 4. BEDA

17) ஹேமமாலா இளவரசியும்,தந்த இளவரசனும் புத்தபெருமானின் பற்சின்னத்தை எடுத்து வந்து தரையிறங்கிய துறைமுகம் யாது ?

1. லங்காபட்டுண 2. ஜம்புகோளபட்டினம் 3. கோகண்ணதித்த 4. மாதெட்ட

18) கலா ஓயாவும் தெதுறு ஓயாவும் புராதன காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது ?

1. கோண நதி,ஜஜ்ஜர நதி
2. ஜஜ்ஜர நதி, கோண நதி
3. கதம்ப நதி, கோண நதி
4. கோண நதி, கால நதி

19) பின்வரும் சம்பவங்களை நடைபெற்ற கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடையை தெரிவு செய்க.

A. சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு
B. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
C. பன்சிய பனஸ் ஜாதகய நூல் சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்படல்
D. தனது பத்தாவது ஆண்டு நிறைவில் கிராம எல்லைகளை அடையாளமிடல்
E. கோட்டை அரண் அமைக்கப்படல்

1. BDEAC
2. DACBE
3. DBACE
4. DBCAE

20) குளக்கட்டு அமைக்கும் தொழிநுட்பத்தை அடையாளம் காண்பதற்காக அகழ்வு செய்யப்பட்ட குளம் யாது ?

1. மாதுரு ஓயா நீர்த்தேக்கம்
2. சீகிரிய குளம்
3. ஹுருளு வாவி
4. கலா வாவி

21) புராதன நீர்முகாமைத்துவத்தின் கீழ் பொய்கைகள் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது ?

1. அலங்காரத்திற்காக
2. உலர்வலய மக்களின் பயன்பாட்டிற்காக நீரை தேக்கி வைத்தல்
3. பிக்குமார்களின் பயன்பாட்டிற்காக
4. நீர்ப்பாசனத்துறை பொறியியலாளர்களின் பெருமையை உலகறியச் செய்வதற்காக

22) தற்கால கொங்றீட் தொழிநுட்பத்தை பிரதிபலிக்கக் கூடியதாக புராதன காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு நிர்மாணம்

1. மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் மடைக்கதவு
2. யோதவாவியின் அணை
3. உடரஞ்சாமடம வீட்டின் அத்திரவாரம்
4. ருவன்வெலிசாய விஹாரையின் அத்திவாரம்

23) இயற்கையான காற்றுச் சக்தியை பயன்படுத்தி இரும்பு உற்பத்தி செய்யப்பட்ட பிரதேசம்,

1. அலகொலவெவ
2. ஹல்துமுல்லை
3. சமனலவெல
4. சீகிரியா

24) புராதன கால மக்கள் நீளத்தை அளவிட பயன்படுத்திய மிகச் சிறிய அலகு,

1. பரமாணு
2. ஆங்குலம்
3. வியத்த
4. கவ்வ

25) முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பிறந்த இடமான தெதிகமவின் பழைய பெயர்,

1. கேகாலை
2. கொடவெஹெர
3. புங்க்காம
4. பண்டுவஸ்நுவர

26) புராதன சமூகத்தில் வாழ்ந்த பொதுமக்கள் கல்வெட்டுக்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டனர் ?

1. தாஸயன்
2. கூடின்
3. பிரபுக்கள்
4. ரத்கோல்

27) கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணவர்மன் அரச பரம்பரையினரின் கல்வெட்டுக்களில் “வதால” எனும் பதத்தின் மூலம் குறிப்பிடப்படுவது,

1. நீதிமன்றம்
2. சட்டத்துறை
3. நிர்வாகத்துறை
4. சட்டமியற்றும் சபை

28) X,Y நிரல்களை இணைக்குக.

| (X) | (Y) |
| --- | --- |
| 01) படுகொலை சட்டம் | A. அரசனுக்கு சொந்தமான நிலப்பாவனைக்காக செலுத்தப்படும் வரி |
| 02) தக்கபதி | B. குறிப்பிட்ட காலத்தில் நெல் விதைக்காதவர் செலுத்திய வரி |
| 03) போஜக்கபதி | C. குளத்து நீரை பயன்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட வரி |
| 04) குருஹதண்ட | D. எந்த மிருகத்தையும் கொல்லக்கூடாது |
| | E. ஒளிந்திருக்கும் குற்றவாளிக்காக கிராம மக்கள் செலுத்தும் வரி |

1. DCAE 2. DACE 3. CDBA 4. CBAD

29) குருநாகலை இராசதானி காலத்தில் வாழ்ந்த ஒருவரினால் காண்பதற்கோ, கேட்பதற்கோ முடியாத ஒரு சம்பவம்,

A. ருவன்வெலிசாயவை அமைத்தல்.
B. சென்ஹோ சேனாதிபதியின் ஆக்கிரமிப்பு
C. சந்திரபானுவின் படையெடுப்பு
D. சிங்கள மக்களின் போராட்டம் இடம்பெறல்.

1. A யும் C யும் 2. B யும் C யும் 3. A யும் C யும் 4. B யும் D யும்

30) அநுராதபுர இராசதானியின் இறுதி ஆட்சியாளன் யார் ?

1. பண்டுகாபயன் 2. ஐந்தாம் மஹிந்தன் 3. பராக்கிரம பாண்டியன் 4. முதலாம் புவனேகபாகு

31) கலிங்க மாகனை தோல்வியடையச் செய்த தம்பதெனிய இராசதானியின் அரசன் யார் ?

1. 2ம் பராக்கிரமபாகு 2. 3ம் பராக்கிரமபாகு 3. 4ம் பராக்கிரமபாகு 4. 3ம் விஜயபாகு

32) இரண்டாம் நகரமயமாக்குதல் காலத்தில் பயிரிடப்பட்ட பிரதான வர்த்தகப் பயிர் யாது ?

1. கறுவா 2. நெல் 3. சுவைச் சரக்குப் பயிர்கள் 4. பாக்கு

33) மலையகத்தின் புதிய அரச வம்சத்தை ஆரம்பித்து வைத்த ஆட்சியாளன் யார் ?

1. சேனாசம்மத விக்ரமபாகு 2. முதலாம் விமலதர்மசூரியன்
3. இரண்டாம் இராஜசிங்கன் 4. ஸ்ரீ விஜய இராஜசிங்கன்

34) நாட்டில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக கீர்த்தி சிறீ இராஜசிங்க மன்னனால் சங்கராஜ பதவி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட பௌத்த பிக்கு,

1. வாரியபொல சுமங்கல தேரர் 2. ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரர்
3. வலிவிட்ட சரணங்கர தேரர் 4. வீதாகம மைத்திரிய தேரர்

35) 'அ', 'ஆ' சரியாக நிரல்களை இணைத்தால் பெறப்படும் விடையவது,

| (அ) | (ஆ) |
| --- | --- |
| 01) மரகே பத்த | A. சலவை செய்தல் |
| 02) குருவே பத்த | B. பிடவை நெய்தல் |
| 03) ரதா பத்த | C. யானை பிடித்தல் |
| 04) ஹெந்த பத்த | D. போக்குவரத்துச் சேவை |
| | E. வனைதல் |

1. ACDE 2. DCBA 3. DCAB 4. DBAC

36) ஐரோப்பாவின் மத்திய காலப்பகுதியில் இறந்த மொழியாக மாறிய பாஷை எது ?

1. கோத்திர மொழி 2. இலத்தீன் மொழி 3. ஆங்கில மொழி 4. கிரேக்க மொழி

37) "X", "Y" நிரல்களை இணைத்தால் வரும் விடை,

| (X) | (Y) |
|---|---|
| 01) புவி உருண்டையானது | A. ஐசாக் நியூட்டன் |
| 02) கோள்கள் நீள்வட்டப் பாதையில் வலம் வருகின்றன | B. ஜொஹன்னஸ் குட்டன் பேர்க் |
| 03) அச்சியந்திரம் | C. நிக்கலஸ் கொப்பர்நிக்கஸ் |
| 04) புவியீர்ப்பு விதி | D. ஜொஹன்னஸ் கெப்லர் |

1. ACDB 2. CDBA 3. DABC 4. DCBA

38) போர்த்துக்கேயர் இலங்கையை எவ்வாறு அழைத்தனர் ?

1. சிலோன் 2. செரண்டிப் 3. செம்பவளத் தீவு 4. செய்லான்

39) மலையகத்திற்கு எதிராக கன்னொருவ யுத்தத்தை வழிநடாத்திய போர்த்துக்கேய சேனாதிபதி யார் ?

1. தியாகோத மெலோ 2. பேரோ லொபேஸ் த சூசா

3. தொன் ஜெரனிமோ த அஸவேது 4. கொன்ஸ்தந்தினு த சூசா

40) ஆசியாவுக்கு வருகை தந்த ஒல்லாந்தர் தமது கீழைத்தேய தலைமைக் காரியாலயத்தை அமைத்த இடம்,

1. கோவா 2. சென்னை 3. பத்தேவியா 4. பம்பாய்

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2024 (2025)
இறுதி தவணைப் பரீட்சை - 2024 (2025) / **Year End Term Test - 2024 (2025)**

ශ්‍රේණිය / தரம் / Grade 10

# வரலாறு - II

කාලය / நேரம் / Time 3மணி 10நி

නම / பெயர் / Name ..........................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ..........................................

அறிவுறுத்தல்கள்

- பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும் பகுதி III ல் ஒரு வினாவுக்கும் விடை தருக.
- விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆறாகும்.

## பகுதி I

01) (அ). வினா I ல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், வினா IIல் வழங்கப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்திலும் குறித்துக் காட்டுக.

I. கோகண்ணதித்த, காலி, ஜம்புகோளபட்டினம், யோதவாவி, பொம்பரிப்பு, கலாவாவி, நீர்கொழும்பு, பாஹியன்கல, தெதுறு ஓயா, மினிஹாகல்கந்த, கிரிந்தி ஓயா, செங்கடகல (12 புள்ளிகள்)

II. சுமாத்திரா தீவு, கோவா, பாரசீக வளைகுடா, இத்தாலி, கொன்ஸ்தாந்தி நோபிள், சென்னை (06 புள்ளிகள்)

(ஆ). பின்வரும் A, B, C, D வினாக்களுக்கான விடைகளை விடைத்தாளில் எழுதுக.

A- கி.பி.1344 ல் இந்நாட்டுக்கு வருகை தந்த அரேபிய தேச சஞ்சாரி

B- சீகிரியாவை இராசதானியாக்கிய அரசன்

C- போர்த்துக்கேயரை விரட்டியடித்த மன்னன்

D- சீதாவக்கை இராசதானியின் முதல் மன்னன் (04 புள்ளிகள்)

- A,B யில் உள்ள உருக்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

A. I. உரு A யில் உள்ள நிர்மாணம் யாது ?
II. அது காணப்படக்கூடிய இடம் யாது ?
III. இதனை ஆராதனை செய்யும் மதப்பிரிவினர் யாவர் ?
IV. இதனை அமைக்க பயன்படுத்தப்பட்டுள்ள பொருள் யாது ?

(04 புள்ளிகள்)


உரு A


உரு B

B. I. உரு B யில் காட்டப்படும் மன்னன் யார் ?
II. இவரின் இளமைக்கால பெயர் யாது ?
III. இவர் ஆட்சி செய்த இராசதானி யாது ?
IV. இவரின் தாயாரின் பெயர் என்ன ? (04 புள்ளிகள்)

## பகுதி II

02) I. கல்வெட்டுக்கள் வரையப்பட்டுள்ள பாறைகளின் வடிவங்களுக்கு ஏற்ப வேறுபடுத்திக் காட்டுக. (03 புள்ளிகள்)

II. புராதன நாணயங்களின் மூலம் அறிந்து கொள்ள முடியுமான தகவல்கள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் இரண்டை விளக்கிக் கூறுக. (05 புள்ளிகள்)

IV. முன் வரலாற்றுக்கால மக்களின் மரணச் சடங்குமுறைகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றின் இரண்டைப் பற்றி சுருக்கமாக எழுதுக. (06 புள்ளிகள்)

03) I. வரலாற்றுக் காலத்துக்குரிய ஆரம்ப காலத்தில் காணப்பட்ட "வாபிகாம" எனும் குடியிருப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. அக்கால குடியேற்றப் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.(04 புள்ளிகள்)

III. புராதன கால மக்கள் அரசர்களிடம் எதிர்பார்த்த சேவைகள் மூன்றை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

IV. வசப மன்னன் இந்நாட்டை ஆட்சி செய்த மன்னர்களில் சிறந்த ஒருவன் என நிரூபிக்கக் கூடிய விடயங்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

04) I. சர்வதேச வர்த்தகம் இடம்பெற்ற இலங்கையின் புராதன துறைமுகங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் வினாக்களுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
(வெஜ, வொஹார, பிடபிம், சேன், சதிவிஹரிய, தேரர்)

A. கல்வெட்டுக்களில் சேனைகளை குறிப்பிட்டு காட்டப் பயன்படுத்தப்பட்ட சொல்
B. சட்டம் பற்றிய ஆழ்ந்த அறிவுடைய தொழில் பிரிவினர்
C. தலைமை பிக்குகளின் சமீபத்தில் வாழ்ந்த மாணவ பிக்குகள்
D. புராதன நூல்களில் வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பெயர் (04 புள்ளிகள்)

III. புராதன சமூகத்தில் சிறந்த கைத்தொழில்கள் காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் மூன்றை எழுதி அவற்றில் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

IV. (A). புராதன காலத்தில் பாரிய குளங்களை அமைத்தமைக்கான நோக்கங்கள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

(B). குளத்தின் மூன்று பகுதிகளை பெயரிட்டு அவற்றில் ஒன்றை தெரிவு செய்து அதன் தொழிற்பாட்டை சுருக்கமாக எழுதுக. (04 புள்ளிகள்)

05) I. (A). இலங்கையின் புராதன இரும்பு உருக்கு ஆலைகளின் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ள இடங்கள் இரண்டை தருக. (02 புள்ளிகள்)

(B). அவற்றில் ஒன்றில் பயன்படுத்தப்பட்ட தொழினுட்ப முறையை எழுதுக. (01 புள்ளிகள்)

II. வரிச் சட்டத்தின் கீழ் பின்வரும் அறவீடுகள் மூலம் சேகரிக்கப்பட்ட வரிகள் யாவை ?

I. தக்கபதி
II. போஜக்கபதி (04 புள்ளிகள்)

III. புராதன சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் தங்களை அழகுபடுத்தும் வேலைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்கான ஆதாரங்கள் மூன்றை எழுதி தெளிவுபடுத்துக. (03 புள்ளிகள்)

IV. புராதன கால மக்கள் இயற்கையாக சூழலில் காணப்படும் பொருட்களை மாத்திரம் உணவாக உட்கொண்டார்கள் என்பதை மூன்று காரணிகளூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

06) I. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

A. அநுராதபுர நகரை திட்டமிட்டு அபிவிருத்தி செய்தவர் யார் ?

B. இராசரட்டையை சோழர்களிடம் மீட்டெடுத்து பொலன்னறுவையை தலைநகரமாக தெரிவு செய்த மன்னன் யார் ?

C. பெலிகல தளதாமாளிகையை அமைத்து தந்தாதுவை வைத்தவர் யார் ?

(03 புள்ளிகள்)

II. முதலாம் நகராக்க காலத்தைச் சேர்ந்த புராதன நகரங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. தம்பதெனிய நகரை ஆட்சி செய்த சிறந்த ஆட்சியாளன் யார்? அவரின் சேவைகள் இரண்டை உதாரணம் ஒன்றுடன் தெளிவுபடுத்தி எழுதுக. (05 புள்ளிகள்)

IV. இரண்டாம் நகராக்க காலத்தில் இலங்கையில் நிலவிய பொருளாதார முறையில் காணப்பட்ட இலட்சணங்கள் மூன்றை விளக்கிக் காட்டுக. (06 புள்ளிகள்)

07) I. மலையக இராசதானிக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. மலையக இராசதானியின் ஆரம்ப அரசன்

B. தந்ததாதுவின் சேவைகள் தொடர்பான நபர்

C. கி.பி.1766ல் ஒல்லாந்தர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட மலையக ஆட்சியாளன்

D. அதிகாரம்மார்களின் செய்திகளை பிரதேச பொறுப்பாளர்களுக்கு எடுத்துச் சென்றவர்

(பல்லேகம்பஹ, கடுபுள்ளேரால, சேனாசம்மத விக்ரமபாகு, தியவடன நிலமே, கீர்த்தி சிறீ இராஜசிங்கன், சீதாவக்கை இராஜசிங்கன், இராஜாதி இராஜசிங்கன்) (04 புள்ளிகள்)

III. மலையக இராசதானியின் சமூக அமைப்பில் காணப்பட்ட இலட்சணங்களை இரண்டு காரணிகளூடாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் மலையக இராசதானியின் தலைசிறந்த மன்னனாவான் என்பதை மூன்று காரணிகளூடாக தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

## பகுதி III

08) I. மறுமலர்ச்சிக் காலத்தில் தேவலாயங்களின் அதிகாரத்தை விமர்சனம் செய்த மூவரை குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

II. சரியான விடைகளை எழுதுக.

A. மத்திய காலத்தின் இறுதியில் மிக முன்னேற்றமடைந்த வர்த்தக நகரம்

B. தற்கால வானியல் துறையின் தந்தை என அழைக்கப்படும் போலந்து நாட்டவர்.

C. அச்சகத் தொழிலை இந்நாட்டில் அறிமுகப்படுத்திய ஐரோப்பிய இனத்தவர்

D. டிவீனா கொமடியா எனும் நாடக நூலை எழுதிய எழுத்தாளர் (04 புள்ளிகள்)

III. மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது இலங்கையின் அரசியல் துறையில் செல்வாக்குச் செலுத்திய முறையை மூன்று காரணிகளூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

09) I. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறையில் சிறந்து விளங்கிய அறிஞர்கள் மூவரை பெயரிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

A. ஆபிரிக்காவின் புயல்முனைக்கு வருகை தந்த தேச சஞ்சாரி

B. மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் பற்றி கண்டறிந்த அறிஞன்

C. புவி உருண்டையானது என கண்டுபிடித்தவர்

D. வியாழன் கிரகத்தின் துணைக் கோள்களை கண்டுபிடித்த வானியல் அறிஞன் (04 புள்ளிகள்)

III. மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலியில் தோன்றிய சித்திரத்துறை மறுமலர்ச்சியின் விஷேட அம்சங்கள் இரண்டை உதாரணத்துடன் தெளிவுபடுத்திக் காட்டுக. (05 புள்ளிகள்)

IV. மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களை மூன்று காரணிகளூடாக தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)





# 10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 200




Rs : 300




Rs : 350




Rs : 300




Rs : 300




Rs : 150




Rs : 200




Rs : 150




Rs : 300




Rs : 300




Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE



පොත් 3 ක් ගත්තොත්,
1 ක් නොමිලේ.
RATHNA EXERCISE BOOKS
A4|200
25%
දක්වා වට්ටම් හිමිකරගන්න.
හොඳම පොත් අඩුම මිලට අපෙන් විතරමයි...
දැන්ම lol.lk වෙත පිවිසෙන්න
Atlas
Richard
RATHNA EXERCISE BOOKS
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
LOL.LK
LOL STORE (PVT) LTD
COD
CASH ON DELIVERY
037 20 60 110
071 77 74 440